பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
28 12 2025 SUNDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. உள்நாட்டில் கப்பல் கட்டும் தொழிலை ஊக்குவிக்க மத்திய அரசு புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

3. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்றும் நடைபெறவுள்ளது.

4. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நாளுக்கு நாள் சீர்குலைந்து வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான நான்காவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று திருவனந்தபுரத்தில் நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<<

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கர்நாடக மாநிலம் Kadamba கடற்படைத் தளத்தை இன்று பார்வையிடுகிறார்.

Karwar துறைமுகத்தில் இருந்து இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பயணம் செய்ய உள்ளார்.

விசாகப்பட்டினத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்த மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் அப்துல் கலாமிற்குப் பிறகு, நீர்மூழ்கிக் கப்பலில் பயணிக்கும் இரண்டாவது குடியரசுத்தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடியரசுத்லைவரின் வருகையை ஒட்டி Karwar கடலோரப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

Karwar-ல் இருந்து Majali வரையிலான கடற்பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியாவை உலகளாவிய கடல்சார் வல்லரசாக மாற்றும் நோக்கில், கப்பல் கட்டும் துறைக்கான இரண்டு முக்கியத் திட்டங்களின் செயல்பாட்டு வழிகாட்டுதல்களை மத்திய அரசு அறிவித்துள்ளது.

'கப்பல் கட்டும் நிதி உதவித் திட்டம்' மற்றும் 'கப்பல் கட்டும் மேம்பாட்டுத் திட்டம்' ஆகியவையே அந்த இரண்டு முக்கியத் திட்டங்களாகும்.

இந்தத் திட்டங்கள் உள்நாட்டுக் கப்பல் கட்டும் தொழிலை மறுமலர்ச்சி அடையச் செய்யும் என்று மத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான அரசால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த உறுதியான கொள்கை முடிவுகள், 2036-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

24 ஆயிரத்து 736 கோடி ரூபாய் நிதியுடன் செயல்படுத்தப்படவுள்ள கப்பல் கட்டும் நிதியுதவி திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கப்பலுக்கும் அதன் வகையைப் பொறுத்து 15 முதல் 25 சதவீத நிதி உதவியை மத்திய அரசு வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், கப்பல் கட்டும் பணிகளை ஒருங்கிணைக்க 'தேசிய கப்பல் கட்டும் இயக்கம்' ஒன்றும் உருவாக்கப்பட உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதற்கு எதிராக தேசிய அளவிலான பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்படும் என்று காங்கிரஸ் அறிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜூன கார்கே தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி. சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

அடுத்த ஆண்டு மேற்குவங்கம், தமிழ்நாடு, கேரளா, அஸ்ஸாம் மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நாளுக்கு நாள் சீர்குலைந்து வருவதாக, பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பள்ளி மற்றும் கல்லூரிகள் அருகிலேயே போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக கூறினார்.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்துள்ளதாகவும், இதனால் பெண்களும், குழந்தைகளும் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் சாத்தான்குளத்தில் காவல்நிலையத்தில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட தந்தையும், மகனும் கொல்லப்பட்ட சம்பவத்திற்காக நீதி கேட்ட திமுக ஆட்சியில், இதுவரை 72 காவல்நிலைய மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

>>>>>><<<<<<

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்றும் நடைபெறவுள்ளது.

தமிழகம் முழுவதும் 75 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் இந்த முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளுக்குப் பின்னர் கடந்த 19ஆம் தேதி வெளியிட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்ள விரும்புவோர் அடுத்த மாதம் 18ஆம் தேதிக்குள் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி மாதம் 17ஆம் தேதி வெளியிடப்படவுள்ளது.

>>>>>><<<<<<

சென்னையில் நட்சத்திர விடுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு காவல்துறை கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

ஹோட்டல்கள், நட்சத்திர விடுதிகள் மற்றும் கேளிக்கை விடுதிகளுக்கு வரும் வாகனங்களை முறையாக சோதனையிட வேண்டும் என்றும், அனைத்து நுழைவு வாயில்களிலும் கேமராக்களை பொருத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கேளிக்கை நிகழ்ச்சிகளுக்காக தற்காலிக மேடைகள் அமைத்தால், அதன் உறுதித்தன்மையை தீயணைப்பு துறையினரிடம் தெரிவித்து, தகுதிச் சான்று பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நீச்சல் குளத்தின் மீது மேடைகள் அமைப்பதற்கு தடை விதித்துள்ள காவல்துறை, பாதுபாப்பு பணியில் போதுமான பெண் காவலர்களையும் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளது.

>>>>>><<<<<<

உடல் உறுப்பு தானத்தில் தமிழகத்திலேயே தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கடந்த மூன்றாண்டுகளாக முதலிடத்தில் உள்ளது.

உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வே இதற்கு காரணம் என்று கல்லூரியின் முதல்வர் திரு. மனோகரன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மனோகரன் 37 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

யுக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதலை தொடுத்த நிலையில், அந்நாடு தொடர்ந்து போர் புரியவே விரும்புவதாக யுக்ரைன் அதிபர் திரு. வோலடிமிர் ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

சோமாலியாவிலிருந்து பிரிந்து சென்ற பகுதியை Somaliland என்று இஸ்ரேல் அங்கீகாரம் அளித்துள்ளதற்கு, அரபு நாடுகளின் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தலைநகர் தில்லியில் தொடங்கப்பட்டுள்ள அடல் மலிவு விலை உணவகங்களுக்கு பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பு காணப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர், ராஜதாங்கல் கிராமங்களில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மயிலாடுதுறை மாவட்டம், கவிச்சக்கரவர்த்தி கம்பன் பிறந்த தேரெழுந்தூரில் உள்ள கம்பர் கோட்டத்தில், மாணவர்கள் பங்கேற்ற கம்பராமாயண பாராயண நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் சமையல் எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம், நாளை மறுநாள் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

திருப்பத்தூர் அருகே தனியார் நிலத்தில் பழங்கால குடுவையிலிருந்து 86 பொன்நிற நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

திருவனந்தபுரம் – சென்னை சென்ட்ரல் விரைவு ரயில் வரும் வியாழக்கிழமை முதல் மொரப்பூரில் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

புத்தாண்டை முன்னிட்டு, கோவை - ராமேஸ்வரம் இடையே முன்பதிவில்லா சிறப்பு ரயில் நாளை இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தானுமாலய சுவாமி கோவில் திருவிழாவை ஒட்டி, வரும் வெள்ளிக்கிழமை அம்மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜையை முன்னிட்டு, நேற்று நடைபெற்ற பால்குட வீதி உலாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<

சென்னையில் நேற்று வீடுகளிலிருந்து 582 டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, அகற்றப்பட்டதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான நான்காவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று திருவனந்தபுரத்தில் நடைபெறுகிறது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரில் இதுவரை நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் இந்தியா வெற்றிபெற்று, *3-0* என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*>>>>>><<<<<<<*

தேசிய சீனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்திற்கு ஒடிசாவின் *Tanvi Patri* முன்னேறியுள்ளார்.

விஜயவாடாவில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் அவர் *18-21, 21-12, 21-15* என்ற செட்கணக்கில் மஹாராஷ்ட்ராவின் *Sruti Mundada*-வை வென்றார்.

*>>>>>>END<<<<<<<*